**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No. 01/2021**

2024ம் வருடம் பிப்ரவரி திங்கள் 08ம் நாள் வாதி தரப்பில் 1வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு.C.துரைமுருகன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர : திருமதி.ராமலெட்சுமி கிராமம்:
தந்தை / கணவர் பெயர் : தொழில் :
வயது :

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் இவ்வழக்கின் வாதியாவேன். என் தரப்பு வாய்மொழி சாட்சியத்தை எழுத்துமூலமான பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னுடைய அறிவுக்கு முழுமையாய் தெரிந்த மட்டிலும் உண்மை என்று உறுதி கூறி இந்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள விபரங்களை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2. எனது ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ.1 ஆகும்.

3. எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகும்.

4. தாவா 1 முதல் 6 இலக்க சொத்துக்களுக்கு எனது தகப்பனார் பால்ச்சாமித் தேவர் பெயரில் ஏற்பட்ட பட்டா எண்.584ன் கணினி நகல் வா.சா.ஆ.3 ஆகும்.

5. தாவா 7ம் இலக்கச் சொத்துக்கு எனது தகப்பனார் பால்ச்சாமித் தேவர் பெயரில் ஏற்பட்ட பட்டா எண்.589ன் கணினி நகல் வா.சா.ஆ.4 ஆகும்.

6. தாவா 8, 9 இலக்கச் சொத்துக்களுக்கு எனது தகப்பனார் பால்ச்சாமித் தேவர் மற்றும் எனது சித்தப்பாக்களான முத்துராமத்தேவர், காந்தி பெயரில்

ஏற்பட்ட கூட்டுப்பட்டா எண்.1124 ன் கணினி நகல் வா.சா.ஆ.5 ஆகும்.

7. தாவா 10ம் இலக்கச் சொத்துக்கு எனது தகப்பனார் பால்ச்சாமித் தேவர் மற்றும் எனது சித்தப்பாவான காந்தி பெயரில் ஏற்பட்ட கூட்டுப்பட்டா எண்.965 ன் கணினி நகல் வா.சா.ஆ.6 ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.